STC.No. 321/2025 PW1.திரு.வைரமணி

தேதி– 23.03.2026

எதிரிகள் ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் படிக்கவில்லை. நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு விவசாயத்தில் என்ன வருமானம் வரும் என்றால் சுமார் ரூ.1 லட்சம் வரை மாத வருமானம் வரும். நான் சொந்தமான தோட்டம் வைத்துள்ளேனா என்றால் இல்லை, குத்தகைக்கு வைத்துள்ளேன். நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் செய்கிறேன். நான் Pan card வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். நான் பணம் கொடுக்கல் வாங்கல் அனைத்தும் எவ்வாறு செய்வேன் என்றால் ரொக்கமாக கொடுத்து வாங்குவேன். நான் வட்டிக்கு பணம் கொடுக்கிறேனா என்றால் இல்லை.

2) எதிரிகள் எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் சின்னமனூர் காவல்நிலையத்தில் சுந்தரமூர்த்தி ேஹாம்காடாக இருக்கிறார், அங்கு சென்று வரும்போது பழக்கம். சுந்தரமூர்த்தியின் மனைவி எனக்கு பழக்கமா என்றால் சரிதான், அவரது வீட்டிற்கு சென்று வருவேன். எதிரிகளின் சொத்தின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் வீடு உள்ளது. சுந்தரமூர்த்தியின் குடும்பத்தில் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரி எப்போது பணம் கேட்டார் என்றால் நான் பணம் கொடுத்த தேதிக்கு 10 நாட்களுக்கு முன்பு நேரடியாக வந்து பணம் கேட்டார். நான் கொடுக்கும் சமயத்தில் வேறுயாரும் இருந்தார்களா என்றால் இல்லை, நானும், எதிரிகளும் இருந்தோம்.

3) எனக்கு விவசாயத்தில் வந்த பணத்தை எதிரிகளுக்கு கொடுத்தேன். எதிரிகள் பணம் பெற்றதற்காக கூடுதல் ஆவணங்கள் கொடுத்தார்களா என்றால் இல்லை, காசோலை மட்டும் கொடுத்தார்கள். காசோலையில் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் எதிரிகள் காசோலையை என் முன்னிலையில் நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தார்கள். எதிரிகள் ஒரே பேனாவால் காசோலையை நிரப்பினார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. காசோலை திரும்பிய பின்னர் எதிரிகளிடம் போனில் தகவல் கூறினேனா என்றால் இல்லை, நேரில் சென்று காசோலை குறித்து கேட்டேன்.

4) மேற்படி விபரத்தை எனது வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். பொதுவாக ரூ.20 ஆயிரத்திற்கு மேல் ரொக்கமாக பணம் கொடுக்கக்கூடாது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த கடனை எனது வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாரா என்றால் தயார். குள்ளப்பகவுண்டன்பட்டியைச் சேர்ந்த பைனான்சியர் முருகேசன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேறு காசோலை வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒரு வழக்கு உள்ளது. மேற்படி வழக்கானது சிவராமன் என்பவர் மீது ரூ.3 லட்சத்திற்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5) குள்ளப்பகவுண்டன்பட்டியைச் சேர்ந்த பைனான்சியர் முருகேசனிடம் எதிரிகள் வைத்திருந்த வரவு–செலவிற்காக கொடுத்த நிரப்பப்படாத காசோலையை நான் பெற்று முருகேசனின் பினாமியாக செயல்பட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலையை நான் நிரப்பி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.23 15:28:25 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

J.M, F.T.C(M.L),Uthamapalayam